(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

FWC

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2022
## Conducted by Field Work Centre, Thondaimanaru.
## 2nd Term Examination - 2022

| | | | | |
|---|---|---|---|---|
| பொருளியல் Economics | Three Hours / Gr -12 (2023) | 21 | T | I,II |

**அறிவுறுத்தல்கள் :–**

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
- **விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது சுட்டெண்ணை எழுதுக.**
- **விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.**
- **1 தொடக்கம் 20 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து, அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய விடைத்தாளில் புள்ளடி (X) இடுவதன் மூலம் காட்டுக.**


### பகுதி – I

01. பொருளியலின் மையப் பிரச்சினையானது.
   1) பொதுப் பொருட்களையும் சேவைகளையும் வழங்கும் நோக்கில் ஜனநாயக ரீதியிலான அரசியல் கட்டமைப்பினைத் தாபித்தலாகும்.
   2) பொருள்கள், வளங்களின் சார்பு அருமைத்தன்மையினைச் சரியாக பிரதிபலிக்கும் விதத்தில் விலைகளை நிர்ணைத்தலாகும்.
   3) மனித விருப்பங்களோடு ஒப்பிடுகையில் உற்பத்தி வளங்கள் அருமையாக காணப்படலாம்.
   4) பேண்தகு அபிவிருத்தியை அடைதலாகும்.
   5) வறுமையை குறைப்பதற்கான பண வருமானத்தின் சம பங்கீட்டை எய்துதலாகும்.

(……….)

02. பின்வரும் கூற்றுக்களில் நுண்பாக பொருளியலுக்குரிய நேர் பொருளியல் கூற்று யாது?
   1) செல்லிடத்தக்க வருமானம் குறைவடையும் போது தனியார் சேமிப்பு குறைவடையும்.
   2) நாட்டின் பொது விலைமட்டம் 40% ஆல் அதிகரிப்பது பொருளாதார ரீதியில் பாதிப்பாகும்.
   3) அந்நிய செலாவணி கையிருப்பு போதாமல் இருப்பதனால் இறக்குமதிப் பதிலீட்டுப் பொருட்களை உள்நாட்டில் உற்பத்தி செய்வதை ஊக்குவிக்க வேண்டும்.
   4) பால்மாவின் விலை அதிகரிக்கும் போது அதன் கேள்வித் தொகை குறைவடையும்.
   5) அரிசிக்கான உள்நாட்டு நிரம்பல் குறைவடைந்தமையால் வெளிநாடுகளில் இருந்து அரிசியை இறக்குமதி செய்ய வேண்டும். (……….)

03. ஒரு பொருளாதாரத்தின் உற்பத்தி சாத்திய வளையி கீழே தரப்பட்டுள்ளது.



(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

தற்போது இப்பொருளாதாரம் A புள்ளியில் தொழிற்படுகின்றது எனக்கொள்க. எனினும் A புள்ளிக்கான எல்லைக் கிரயம் எல்லை அனுகூலத்தை விட அதிகமாகும். குறித்த பொருளாதாரம் பொருளாதார செயற்திறனை அடைவதற்கு

1) x உற்பத்தியை குறைக்க வேண்டும் அந்த வளங்களைக் கொண்டு y உற்பத்தியை அதிகரிக்க வேண்டும்.
2) y உற்பத்தியை குறைக்க வேண்டும் அந்த வளங்களைக் கொண்டு x உற்பத்தியை அதிகரிக்க வேண்டும்.
3) x,y ஆகிய இரு உற்பத்திகளையும் அதிகரிக்க வேண்டும்.
4) x,y ஆகிய இரு உற்பத்திகளையும் குறைக்க வேண்டும்.
5) y உற்பத்தி மாறாதிருக்க x உற்பத்தியை குறைக்க வேண்டும். (……….)

04. உற்பத்திச் சாத்திய வளையியில் உள்ள எல்லாப் புள்ளிகளிலும் எதிர்பார்க்கப்படும் நிலைமை
1) வளப் பங்கீட்டு வினைத்திறன்
2) பொருளாதார வினைத்திறன்
3) உற்பத்தி வினைத்திறன்
4) விலையுறுதித் தன்மை
5) உற்பத்திப் பங்கீட்டின் நியாயத்துவம் (……….)

05. மாற்றுக் காரணிச் சேர்க்கைகளிடையே பொருத்தமான காரணிச் சேர்க்கையை தெரிவு செய்ய வேண்டியுள்ளது. என்பதைச் சரியாகக் குறிப்பிடுவது
1) எதனை எந்தளவில் உற்பத்தி செய்வது
2) வளங்கள் வினைத்திறனாக ஒதுக்கீடு செய்யப்படுகின்றதா என்பதாகும்.
3) தொழில்நுட்பத் தெரிவுப் பிரச்சினை
4) வருமானப் பங்கீடு சார்ந்த பிரச்சினை
5) யாருக்காக உற்பத்தி செய்வது (……….)


06. சந்தைப் பொருளாதாரமொன்றில் மட்டும் இருக்கும் என தீர்மானிக்க முடியாத பண்பு எதுவாக அமையும்
1) கேள்வி, நிரம்பல் அடிப்படையில் அமைந்த விலைப் பொறிமுறையாகும்.
2) தனிப்பட்ட ஆதன முறையாகும்.
3) தன்னார்வ அடிப்படையில் கருமங்கள் புரியும் வீட்டுத்துறையும், முயற்சியாண்மையும்
4) முயற்சியாண்மை சுதந்திரம்
5) உற்பத்தி முயற்சியாண்மையுடைய இலாபம் (……….)

07. ஒரு பொருளின் கேள்வி என்பது
1) ஒரு குறித்த விலையில் நுகர்வோர் அப்பொருளை கொள்வனவு செய்யத் திட்டமிடும் தொகையாகும்.
2) அப்பொருளின் விலை மற்றும் நுகர்வோனின் வருமான மட்டம் என்பவற்றிலிருந்து சுயாதீனமானதாகும்.
3) நுகர்வோனின் கொள்வனவுத் திட்டத்திலிருந்து சுயாதீனமானதாகும்.
4) வெவ்வேறு விலைகளில் நுகர்வோன் கொள்வனவு செய்ய விரும்பும் வெவ்வேறு தொகைகளாகும்.
5) எப்போதும் சமநிலைத் தொகைக்குச் சமமாகும். (……….)

08. குறித்த பண்டமொன்றின் விலை அதிகரிக்கும் போது அதன் கேள்வியிளது குறைவதில் செல்வாக்கு செலுத்தும் வருமானப் பதிலீட்டு விளைவு
1) சார்பு விலை குறைந்த பண்டங்களை நுகர்வோன் நாடுதல்
2) பண்டத்தின் விலை அதிகரிக்கும் போது மெய் வருமானம் அதிகரித்தல்.
3) பண்டத்தின் விலை அதிகரிக்கும் போது மெய் வருமானம் வீழ்ச்சியடைதல்
4) குறித்த பண்டத்தின் விலை எதிர் காலத்தில் குறையும் என்ற எதிர்பார்ப்பில் கேள்வியைக் குறைத்தல்
5) பண்டத்தின் விலை அதிகரிப்பின் போது பண வருமானம் குறைந்து கேள்வி குறைவடைதல் (……….)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

09. x,y ஆகிய பண்டங்களின் வழங்கல் வளையி பின்வருமாறு




விலை அதிகரிக்கும் போது வழங்கல் நெகிழ்ச்சி மாற்றமடையும் முறையைக் காட்டும் சரியான விடை யாது?

| X பண்டம் | | Y பண்டம் | |
|---|---|---|---|
| நெகிழ்ச்சி | குணகம் | நெகிழ்ச்சி | குணகம் |
| 1) ஒன்றிற்கு குறைவு | வீழ்ச்சியடையும் | ஒன்றிற்கு கூடும் | வீழ்ச்சியடையும் |
| 2) ஒன்றிற்கு குறைவு | அதிகரிக்கும் | ஒன்றிற்கு கூடும் | அதிகரிக்கும் |
| 3) ஒன்றிற்கு கூடும் | அதிகரிக்கும் | ஒன்றிற்கு குறைவு | வீழ்ச்சியடையும் |
| 4) ஒன்றிற்கு கூடும் | வீழ்ச்சியடையும் | ஒன்றிற்கு குறைவு | அதிகரிக்கும் |
| 5) ஒன்றிற்கு கூடும் | அதிகரிக்கும் | ஒன்றிற்கு குறைவு | நிலையாகக் காணப்படும் |

(……….)

10. பின்வருவனவற்றுள் பொருளொன்றின் நிரம்பல் வளையியை இடப்புறமாக நகர்த்துவது எது?
1) பொருளின் விலையின் ஏற்படும் ஒரு வீழ்ச்சி
2) பொருளின் விலையில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு
3) கேள்வியில் ஏற்படும் ஒரு வீழ்ச்சி
4) உற்பத்திச் செலவில் ஏற்படும் ஒரு வீழ்ச்சி
5) உற்பத்திச் செலவில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு (……….)

11. இருவகைப் பண்டங்களின் விலை மாற்றத்தையும் உற்பத்தியாளரின் வருமான மாற்றத்தையும் காட்டும் அட்டவணை பின்வருமாறு

| பண்டம் | விலை அதிகரிப்பு | உற்பத்தியாளர் வருமான மாற்றம் |
|---|---|---|
| A | 10% | 5% |
| B | 20% | -10% |

மேலுள்ள தரவுகளைப் பயன்படுத்தி A,B ஆகிய பண்டங்களின் கேள்வியின் விலை நெகிழ்ச்சியை சரியாகக் காட்டும் விடை

| A பண்டத்தின் கேள்வியின் விலை நெகிழ்ச்சி | B பண்டத்தின் கேள்வியின் விலை நெகிழ்ச்சி |
|---|---|
| 1) நெகிழ்ச்சியற்றது | அலகு நெகிழ்ச்சி |
| 2) அலகு நெகிழ்ச்சி | நெகிழ்ச்சியுள்ளது |
| 3) நெகிழ்ச்சியற்றது | நெகிழ்ச்சியுள்ளது |
| 4) பூரண நெகிழ்ச்சியுள்ளது | பூரண நெகிழ்ச்சியற்றது |
| 5) நெகிழ்ச்சியுள்ளது | நெகிழ்ச்சியற்றது |

(……….)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

12. பண்டம் ஒன்றின் நிரம்பல் தொழிற்பாடு $QS = -100 + 10P$ என்பதில் இருந்து $QS_1 = +10P$ என மாற்றமடைந்தது அதற்கான காரணத்தையும் அதன் போது பண்டத்தின் விலைசார் நிரம்பல் நெகிழ்ச்சிக்கு யாது நிகழும் என்பதையும் தெரிவு செய்க.

| காரணம் | விலைசார் நெகிழ்ச்சி |
|---|---|
| 1) அலகு மானியம் ரூபா 5 | நெகிழ்வுடையதிலிருந்து நெகிழ்வற்றதாக மாறும் |
| 2) அலகு வரி ரூபா 5 | மாற்றமடையாது |
| 3) அலகு வரி ரூபா 10 | அலகு நெகிழ்விலிருந்து நெகிழ்வுடையதாக |
| 4) அலகு மானியம் ரூபா 10 | நெகிழ்விலிருந்து அலகு நெகிழ்வாக மாறும் |
| 5) குறித்திப ண்ட விலை உயர்தல் | மாற்றமடையாது |

(……….)

13. பின்வருவன ஒரு பண்டத்தின் மிகைக் கேள்விச் சமன்பாடும் நிரம்பல் சமன்பாடும் ஆகும்.

$$Q_{Ed} = 28 - 7P$$
$$Q_S = -8 + 6P$$

இங்கு சமநிலை விலை, தொகை முறையே

1) ரூ 4, 16 அலகுகள் 2) ரூ 4, 56 அலகுகள் 3) ரூ 7,20 அலகுகள்
4) ரூ 16, 34 அலகுகள் 5) ரூ 28, 56 அலகுகள்

14. பெற்றோலுக்கான கேள்வி அதிகரிக்கும் அளவை விட பெற்றோலுக்கான நிரம்பல் குறைவடையும் அளவு அதிகமாக இருக்கும் போது சமநிலை விலை, சமநிலைத் தொகை என்பவற்றிற்கு யாது நிகழும்?

| விலை | தொகை |
|---|---|
| 1) அதிகரிக்கும் | நிச்சயமில்லை |
| 2) வீழ்ச்சியடையும் | அதிகரிக்கும் |
| 3) வீழ்ச்சியடையும் | மாறாது |
| 4) அதிகரிக்கும் | குறைவடையும் |
| 5) நிச்சயமில்லை | குறைவடையும் |

(……….)

15. ஒரு குறிப்பிட்ட நுகர்வுப் பொருளின் கேள்விச் சமன்பாடு $Qd = 400 - 5P$ என்னும் சமன்பாட்டினால் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகின்றது. 10 ரூபாவுக்கும் 30 ரூபாவுக்கும் இடையில் இப்பொருளின் விலைக் கேள்வியின் வில் நெகிழ்ச்சிக் குணகம் யாது?

1) $-0.33$ 2) $-0.75$ 3) $-3.0$ 4) $-0.5$ 5) $-2.0$


(……….)

16. குறித்த ஒரு பொருளுக்கான விலைக் கேள்வி நெகிழ்ச்சி $-2.0$ ஆகும். விலையினாது ரூ 40 ஆகும். போது கேள்வித் தொகை 300 அலகுகளாகும். விலையானது ரூ 20 ஆக வீழ்ச்சியடையுமாயின் கேள்வித் தொகை யாது?

1) 900 2) 600 3) 480 4) 560 5) 200 (……….)

17. கிழே தரப்பட்டுள்ள சந்தைச் சமநிலையைக் காட்டும் வரைபடத்தை அவதானித்து 15 ரூபா விலையால் நுகர்வோன் மிகையினையும் உற்பத்தியாளர் மிகையினையும் காண்க.


| நுகர்வோன் மிகை | உற்பத்தியாளன் மிகை |
|---|---|
| 1) ரூ 1500 | ரூ 2250 |
| 2) ரூ 1750 | ரூ 2750 |
| 3) ரூ 1000 | ரூ 2250 |
| 4) ரூ 1500 | ரூ 2550 |
| 5) ரூ 1250 | ரூ 3000 |




(……….)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

18. குறித்தவொரு பண்டத்திற்கு அலகு வரி விதிக்கப்பட்ட சந்தர்ப்பத்தைக் காட்டும் வரைபடம் கிழே காட்டப்பட்டுள்ளது.




வரைபடத்தின் படி வரி அறவிடப்பட்டபின், பின்வரும் நிலைமைகளில் எது சரியானது?

| வரியின் பின் பொருளாதார மிகை | அரச வரி வருமானம் | இழக்கப்படும் சமூக நலச் சேவைகள் |
|---|---|---|
| 1) A+G | B+C+E | D |
| 2) A+D | B+C | D+F |
| 3) D+F | B+C+E | D+F |
| 4) A+G | B+C+E | D+F |
| 5) D+F | B+C | F |

(……….)

19. குறிப்பிட்ட ஒரு பண்டத்தின் கேள்விச் சமன்பாடு $Qd = 800 - 10P$ 2ம் வழங்கல் சமன்பாடு $QS = -100 + 10P$ ஆகும்.
இப்பண்டத்திற்கு ரூ 60 உச்ச விலை வழங்கி குறைவு நிரப்பு கொடுப்பனவு ஒன்றை வழங்க அரசு இணங்கியது உச்ச விலை வழங்கிய பின் குறை நிரப்பு கொடுப்பனவிற்கு அரசு தாங்கும் செலவும் மொத்தச் செலவும் அதிகரிக்கும் அளவைக் காட்டும் சரியான விடை யாது?

| குறை நிரப்புக் கொடுப்பனவுக்கு அரசு தாங்கும் செலவு | மொத்த செலவு அதிகரித்த செலவு |
|---|---|
| 1) ரூ 4500 | ரூ 2250 |
| 2) ரூ 10500 | ரூ 14250 |
| 3) ரூ 15000 | ரூ 7500 |
| 4) ரூ 15000 | ரூ 14250 |
| 5) ரூ 30000 | ரூ 30000 |

(……….)

20. குறைந்து செல்லும் விளைவு விதி என்பது.
   1) தொழிற்சாலையின் பருமன் அதிகரிக்கும் போது அதன் எல்லை உற்பத்தியானது படிப்படியாக வீழ்ச்சியடைகின்றது என்பதாகும்.
   2) தொழிற்சாலையின் பருமன் அதிகரிக்கும் போது அதன் சராசரி செலவு படிப்படியாக வீழ்ச்சியடைகின்றது என்பதாகும்.
   3) நிலையான உள்ளீடுகளுடன் ஒரு நிறுவனமானது மாறும் உள்ளீட்டினை அதிகமாகப் பயன்படுத்தும் போது அதன் எல்லை உற்பத்தி படிப்படியாக வீழ்ச்சியடைகின்றது என்பதாகும்.
   4) நிலையான உள்ளீடுகளுடன் ஒரு நிறுவனமானது மாறும் உள்ளீட்டினை அதிகமாகப் பயன்படுத்தும் போது அதன் சராசரிச் செலவு வீழ்ச்சியடைவது என்பதாகும்.
   5) மாறும் உள்ளீடுகளுடன் நிலையான உள்ளீட்டினை அதிகமாகப் பயன்படுத்தும் போது அதன் எல்லை உற்பத்தி படிப்படியாக வீழ்ச்சியடைகின்றது என்பதாகும்.

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

21. ஒரு நிறுவனம் தனது சகல உள்ளீடுகளையும் 80% இனால் அதிகரிக்கும் போது அதன் வெளியீடு 60% இனால் அதிகரிக்கின்றது. இதன் மூலம் வெளிப்படுத்துவது?
   1) குறைந்து செல்லும் விளைவு விதியாகும்.
   2) குறைந்து செல்லும் அளவுத்திட்ட விதியாகும்
   3) மாறும் விகித சம விதியாகும்
   4) அதிகரித்துச் செல்லும் அழைத்திட்ட விளைவு விதியாகும்
   5) எல்லை விளைவு விதியாகும்.

22. குறுங்காலத்தில் உற்பத்தி நிறுவனமொன்றில் பல்வேறு வெளியீட்டு மட்டங்களின் மொத்த செலவுகளைப் பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

| வெளியீட்டு மட்டம் Q | மொத்தச் செலவு Tc |
|---|---|
| 0 | 100 |
| 1 | 120 |
| 2 | 130 |
| 3 | 138 |
| 4 | 160 |
| 5 | 190 |
| 6 | 238 |
| 7 | 296 |

இத்தகவல்களின்படி 5 அலகுகள் வெளியீட்டை உற்பத்தி செய்யும் போது சராசரி மாறுஞ்செலவின் அளவு யாது?
   1) ரூ 23   2) ரூ 18   3) ரூ 28   4) ரூ 36   5) ரூ 48

23. தரப்படுத்தப்பட்ட அல்லது வேறாக்கம் செய்யப்பட்ட பொருளொன்றை உற்பத்தி செய்யும் சிறு எண்ணிக்கையிலான நிறுவனங்களை உள்ளடக்கிய கைத்தொழில்
   1) தனியுரிமை போட்டிக் கைத்தொழில் எனப்படும்
   2) சிலருரிமை கைத்தொழில் எனப்படும்
   3) தனியுரிமைக் கைத்தொழில் எனப்படும்
   4) நிறைபோட்டிக் கைத்தொழில் எனப்படும்
   5) தூய போட்டிக் கைத்தொழில் எனப்படும்

24. பின்வருவனவற்றுள், இலங்கையில் பெரும்பாலும் சிலருரிமை கைத்தொழிலாகக் கருதப்படக்கூடியது
   1) பூசனி உற்பத்தி
   2) தொலைக்காட்சி ஒளிபரப்பு
   3) புகையிரத சேவை
   4) மின்சார சேவை
   5) அழகுக்கலை நிலையங்கள்

25. பின்வருவனவற்றுள் சரியான கூற்று எது?
   1) பொருளியல் இலாபம் = கணக்கியல் இலாபம்
   2) பொருளியல் செலவு = வெளிப்படையான செலவு + உள்ளார்ந்த செலவு
   3) அமையச் செலவு = பொருளியல் இலாபம்
   4) கணக்கியல் செலவு = உள்ளார்ந்த செலவு
   5) பொருளியல் செலவு = உள்ளார்ந்த செலவு

(25×1 = 25 புள்ளிகள்)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

## பகுதி II

**அறிவுறுத்தல்கள் :-**

- **உப பிரிவுகள் "அ" "ஆ" ஆகிய ஒவ்வொன்றிலும் இருந்து இரண்டு வினாக்களைத் தெரிவு செய்து எல்லாமாக நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.**

**உப பிரிவு 'அ'**
**(இப்பகுதியிலிருந்து இரண்டு வினாக்களைத் தெரிவு செய்க.)**

01. i) இலவசப் பண்டமொன்று பூச்சிய விலையில் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் எல்லையற்ற நிரம்பலைக் கொண்டிருக்கும் எனும் கூற்றுடன் நீர் உடன்படுகின்றீர விளக்குக. (6 புள்ளிகள்)

ii) "பல்வேறு பொருளாதார நெருக்கடிகளை எதிர் நோக்கும் இலங்கைப் பொருளாதாரத்தில் 200 மில்லியன் அமெரிக்க மொலர்களை தற்போது வெளிநாட்டு கையிருப்பாக்கம் காணப்படுகின்றது. இதனைப் பயன்படுத்தி அத்தியாவசிய சேவைகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான எரிபொருளை இறக்குமதி செய்வதென மின்சக்தி எரிசக்தி அமைச்சு கருதுகின்றது. நாட்டில் ஏற்பட்ட உணவுப் பற்றாக்குறையை நீக்குவதற்கு அத்தியாவசிய உணவுப் பொருள்களை இறக்குமதி செய்வதென உணவுப் பாதுகாப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது" (6 புள்ளிகள்)

இச் சம்பவம் தொடர்பில் அருமை தெரிவு மற்றும் அமையச் செலவு என்பவற்றின் அடிப்படை அம்சங்களை இனங்கண்டு விளக்குக. (6 புள்ளிகள்)

iii) மனித மூலதனம் என்றால் என்ன?
நாடொன்றில் மனித வளத்தின் விளைதிறனை மேம்படுத்த மேற்கொள்ளக் கூடிய 2 நடவடிக்கைகளைக் குறிப்பிடுக. (6 புள்ளிகள்)

iv) வள ஒதுக்கீடு தொடர்பான பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சந்தைப் பொருளாதார முறைமை, கட்டளைப் பொருளாதார முறைமையிலிருந்து எவ்வாறு வேறுபடுகின்றது?. (7 புள்ளிகள்)

02. i) அதிகரிக்கும் அமையச் செலவு என்றால் என்ன? அதற்கான காரணங்கள் 2 தருக. (5 புள்ளிகள்)

ii) எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக வேலையின்மை வீதத்தில் ஏற்பட்ட அதிகரிப்பும், நாட்டில் வேலையின்மை காரணமாக வேலை செய்யும் வயது சனத்தொகையில் கணிசமான பகுதியினர் வெளிநாட்டுக்குப் புலம் பெயர்தல் உற்பத்திச் சாத்திய வளையியில் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை விளக்குக. (6 புள்ளிகள்)

iii) பின்வரும் நிகழ்வுகளை உற்பத்தி இயல்தகவு வளையி வரைபடங்களைப் பயன்படுத்தி விளக்குக
அ) சக்தி நெருக்கடியினால் நாளாந்த மின்சார வழங்கல் குறைக்கப்படல்
ஆ) அரச முயற்சிகள் தனியார் மயப்படுத்தலின் விளைவாக வெளியீடு அதிகரித்தல்.

இ) இரு கைத்தொழில்களிலும் தொழிலாளர்களுக்கான தேர்ச்சி திறனை விருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தல்.

ஈ) பொருளாதார நெருக்கடி காரணமாக நாடு பொருளாதார மந்த நிலையை எதிர்கொள்ளல்.

(2x 4 = 8 புள்ளிகள்)

iv) உற்பத்தி வினைத்திறன் மற்றும் வள ஒதுக்கீட்டு வினைத்திறன் என்பவற்றுக்கிடையிலான வேறுபாட்டை எடுத்துக்காட்டுக. (6 புள்ளிகள்)

03. i) ஒரு பொருளினது விலை வீழ்ச்சியினால் ஏற்படும் வருமான விளைவு, பதிலீட்டு விளைவை எவ்வாறு வரையறுப்பீர்? (6 புள்ளிகள்)

ii) பொருளொன்றின் நிரம்பலில் செல்வாக்குச் செலுத்தும் ஏனைய பொருளின் விலை என்பதனால் கருதப்படுவது யாது? (4 புள்ளிகள்)

iii) பின்வரும் பொருளின் வருமானக் கேள்வி நெகிழ்ச்சிப் பெறுமதிகளின் அடிப்படையில் அவற்றை நீர் எவ்வாறு ஆடம்பரப் பொருள், அத்தியாவசியப் பொருள், இழிவுப் பொருள் என வகைப்படுத்துவீர்?

| | |
|---|---|
| அ) மரவள்ளிக் கிழங்கு | - 0.8 |
| ஆ) திறன் பேசி | 2.4 |
| இ) சோளம் | 0.6 |
| ஈ) பெற்றோல் | 1.2 |
| உ) பாண் | -0.4 |

(5 புள்ளிகள்)

iv) "மூலப்புள்ளியினூடாகச் செல்லும் சகல நிரம்பல் கோடுகளிலும் நிரம்பல் நெகிழ்ச்சிக் குணகத்தின் பெறுமதி ஒன்று ஆகும்." வரைபட உதவியுடன் இக்கூற்றை விளக்குக.

(4 புள்ளிகள்)

v) நிரம்பல் வளையியை நகரச் செய்யும் 2 காரணிகளை வரைபடங்களின் உதவியுடன் விளக்குக. (6 புள்ளிகள்)

## உப பிரிவு 'அ'

❖ **இப்பகுதியிலிருந்து இரண்டு வினாக்களைத் தெரிவு செய்க.**

04. i) நுகர்வோன் மிகை உற்பத்தியாள் மிகையை வேறுபடுத்துக. (4 புள்ளிகள்)

ii) குறிப்பிட்ட போட்டிச் சந்தையொன்றில் நிரம்பல் வளையி வலப்புறமாக நகர்வடையும் போது நுகர்வோன் மிகைக்கும் உற்பத்தியாளன் மிகைக்கு ஏற்படும் விளைவுகளை வரைபினூடாக விளக்குக. (6 புள்ளிகள்)

iii) குறித்த ஒரு பண்டத்தின் சந்தைக் கேள்வி நிரம்பல் சமன்பாடுகள் கீழே தரப்பட்டுள்ளன.

$Qd = 100 - 2P$

$Qs = 30 + 3P$

i. சந்தை சமநிலையின் போது விலைசார் கேள்வி நெகிழ்ச்சிப் பெறுமதி யாது?

(2 புள்ளிகள்)

ii. சந்தைச் சமநிலையின் போது பொருளாதார மிகையினை கணிப்பிடுக. (3 புள்ளிகள்)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

iv) பொருளொன்றின் சந்தைக் கேள்வி மற்றும் நிரம்பல் வளையிகளைப் பின்வரும் சமன்பாடுகள் விபரிக்கின்றன.

$Qd = 800 - 20P$

$Qs = 200 + 20P$

i. சமன்பாடுகளைத் தீர்த்து சமநிலை விலை, சமநிலைத் தொகை என்பவற்றைக் கணிப்பிடுக. *(2 புள்ளிகள்)*

ii. அரசு ரூபா 10 இனை அலகு வரியாக விதிப்பின் சமூக நலன் இழப்பின் பெறுமதி யாது? *(8 புள்ளிகள்)*

05. i) ஓர் அத்தியாவசிய நுகர்வுப் பொருள் மிது அரசாங்கம் உயர்ந்தபட்ச விலையினை விதிப்பதனால் ஏற்படும் பொருளாதார விளைவுகள் எவை? *(4 புள்ளிகள்)*

ii) ஒரு உச்ச விலையானது எவ்வாறு மீள முடியாத இழப்பை உருவாக்கும் என்பதனை வரைபடமொன்றின் துணையுடன் விளக்குக. *(6 புள்ளிகள்)*

iii) அரசாங்கம் முட்டை உற்பத்தியாளர்களுக்கு குறைந்த பட்ச விலையாக ரூபா 50 ஐ நிர்னைத்து குறைநிரப்ப கொடுப்பனவையும் வழங்குவதாக கருதுக. சந்தைக் கேள்விச் சமன்பாடுகள், நிரம்பல் சமன்பாடுகள் பின்வருமாறு தரப்பட்டுள்ளன.

$Qd = 600 - 10p$

$Qs = 10p$

i. குறைநிரப்பு கொடுப்பனவ திட்டத்தின் காரணமாக அரசிற்கு ஏற்படும் மானியச் செலவு யாது? *(2 புள்ளிகள்)*

ii. இத்திட்டத்தின் பின் நுகர்வோன் மிகை உற்பத்தியாளன் மிகை யாது? *(4 புள்ளிகள்)*

iii. குறைநிரப்பு கொடுப்பனவு திட்டத்தின் விளைவாக ஏற்படும் மீளமுடியாத இழப்பினைக் கணிப்பிடுக. *(5 புள்ளிகள்)*

iv. குறித்த பொருளொன்றின் கேள்வி நெகிழ்ச்சி ஒன்றுக்கு குறைவாக இருக்கும் போது அரசு உற்பத்தியாளருக்கு மானியம் வழங்கும் போது மானியத்தில் பெறும் பங்கு யாரை சேரும்? *(4 புள்ளிகள்)*

06. i) குறைந்து செல்லும் எல்லை விளைவ விதி என்றால் என்ன? குறுங்கால செலவு வளையிகளின் வடிவத்தில் அது எத்தகைய விளைவுகளைக் கொண்டுள்ளது.

ii) பின்வரும் செலவுகள் நிலையான செலவுகள் மாறும் செலவுகள் என வகைப்படுத்துக.

i. மின்சார கட்டண கொடுப்பனவு

ii. வங்கிக்கடனுக்கான வட்டி

iii. வளமாக்கிகள் கொள்வனவு


iv. ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்ட மேற்பார்யாளர் சம்பளம்

v. எரிபொருளுக்கான செலவு

iii. நிறைபோட்டி சந்தைக்கும் தனியுரிமை சந்தைக்கும் இடையிலான வேறுபாடு யாது?

iv. சாதாரண இலாபம் என்றால் என்ன? அது ஏன் செலவாக கருதப்படுகின்றது?

v. பின்வரும் வரைபடம் குறுங்காலத்தில் சந்தையொன்றிலுள்ள நிறுவனம் ஒன்றின் கேள்வி மற்றும் செலவு வளையிகளைக் காட்டுகிறது.




*அ) ரூ 60 சந்தை விலையில் நிறுவனம் உழைக்கும் இலாபம் யாது?*

*ஆ) நிறுவனம் எந்த விலையில் தொழில் நிறுத்தம் செய்யத் தீர்மானிக்கும்*